SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS
குரோதி வருடம் பங்குனி 5
ஹிஜிரி 1446 ரமலான் 18
மாநிலம் பயனுற!
Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews
• புதுச்சேரி • புதன்கிழமை, மார்ச் 19, 2025 • வெளியூர்: 20-3-2025, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 243 • 8 பக்கம் • ரூ.6


மல்டிகலர் பைகள்

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

## சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் 9 மாதங்கள் இருந்த

# சுனிதா வில்லியம்ஸ் மற்றும் 3 பேருடன் பத்திரமாக தரையிறங்கியது விண்கலம்

## குழுவுக்கு எலான் மஸ்க் பாராட்டு: ஜனாதிபதிக்கு நன்றி



அமெரிக்கா, மார்ச் 19-

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் 9 மாதங்கள் இருந்த சுனிதா, வில்மோர் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர். விண்வெளியில் உணவு உற்பத்திக்கான லெட்யுஸ் கீரை செடி வளர்ப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

9 மாதங்களாக விண்வெளியில் சிக்கித் தவித்த விண்வெளி வீரர்களை மீட்பதாக ஜனாதிபதி டிரம்ப் உறுதியளித்தார். இன்று, அவர்கள் அமெரிக்க வளைகுடாவில் பாதுகாப்பாக தரையிறங்கி உள்ளனர் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

9 மாதங்களுக்கு பின் பூமி திரும்பிய சுனிதா வில்லியம்ஸ். சுனிதா வில்லியம்ஸ்ன் வருகையை குஜராத் மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர். பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரை பூமிக்கு வரவேற்கும் விதமாக கடலில் டால்பின்கள் துள்ளி குதித்து வரவேற்றன. மருத்துவ பரிசோதனைக்கு பிறகு, ஹுஸ்டன் விண்வெளி மையம் அழைத்து செல்லப்படுகின்றனர் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட நால்வர். டிராகனில் இருந்து மீட்கப்பட்ட விண்வெளிவீரர்களுக்கு அடுத்தபணியாக அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்படும் என்று நாசா தெரிவித்துள்ளது. பூமிக்கு வந்து சேர்ந்த விண்வெளி வீரர்கள் நால்வரும் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்து செல்லப்படுகின்றனர். தரையிறங்கிய டிராகன் விண்கலனில் இருந்து வெளியே வந்தார் சுனிதா வில்லியம்ஸ். விண்கலனை விட்டு வெளியே வந்ததும், மீட்புக்குழுவினரோடு சுனிதா வில்லியம்ஸ் கைகுலுக்கினார். விண்கலனில் இருந்து வெளியே வரும் வீரர்கள் தரையிறங்கிய டிராகன் விண்கலனில் இருந்து வீரர்கள் அமரவைத்தப்படியே வெளியே வருகின்றனர். அமர வைத்தப்படி வீரர்கள் ஒவ்வொருவராக கப்பலுக்குள் அழைத்து செல்லப்பட்டனர்.


ஸ்ரீ ராம் மார்கெட்டிங்
தங்க நகை விற்க (அ) மறு அடகு வைக்க
இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்று தரப்படும்
செல்: 87606 61133 , 87606 61199

## குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேசன் பொருட்களை டோர் டெலிவரி செய்யும் திட்டம்: புதுச்சேரி அரசு அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச் 19-

புதுச்சேரி சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. கூட்டத்தொடரின் முதல் நாளில் 2025-26ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை முதல்மந்திரி ரங்கசாமி தாக்கல் செய்தார். இதனை தொடர்ந்து பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றது.அதனை தொடர்ந்து 7வது நாள் கூட்டம் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. வட்டம் தொடங்கியதும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து 9 மாதங்களுக்கு பிறகு பத்திரமாக பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவிற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பேசிய முதல்மந்திரி ரங்கசாமி, நியாய விலைக்கடைகள் இல்லாத பகுதிகளில் வாகனங்கள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு, வீடாக சென்று ரேசன் பொருட்கள் வழங்கப்படும் என அறிவித்தார்.

மேலும், கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் பேசுகையில், புதுச்சேரியில் அடுத்தம் மாதம் 14 ந்தேதி முதல் ஏழை மக்களுக்கு 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

## பணிக்கு வராவிட்டால் சம்பளம் கிடையாது அரசு ஊழியர்களுக்கு தமிழக அரசு எச்சரிக்கை

சென்னை, மார்ச் 19-

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கத்தினர் 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டி வருகின்றனர். இந்நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றின் மீது உரிய முடிவு காணும் வகையில் அமைச்சர்கள் அடங்கிய குழுவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைத்து இருந்தார். இந்த குழுவினர் ஏற்கனவே அரசு ஊழியர்கள் சங்கங்களை அழைத்து ஆலோசனை நடத்தி இருந்தனர்.

ஆனாலும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அரசு செயல்படுத்த முன்வர வேண்டும் என்றும், சரண்டர் விடுப்பை இந்த ஆண்டு முதல் அமல்படுத்த வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்காக பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்த ஆலோசித்து உள்ளனர். இதில் குறிப்பிட்ட சில சங்கத்தினர் இன்று ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அப்படி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் ஊதியம் கிடையாது என்று தமிழக அரசு இப்போது எச்சரிக்கை விடுத்து உள்ளது. மருத்துவ விடுப்பை தவிர சாதாரண விடுப்போ, மற்ற விடுப்போ அரசு ஊழியர்கள் நாளை (இன்று) எடுக்க கூடாது என்றும் தமிழக அரசு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

இது குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஒவ்வொரு துறை செயலாளர்களுக்கும், மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுப்பி உள்ள சுற்றறிக்கையில் கூறி இருப்பதாவது: அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் சில, தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று ஒரு நாள் (19ந்தேதி) வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளன.

இது சம்பந்தமாக மேற்கோள் காட்டப்பட்டு உள்ள குறிப்பில், அரசு முன் வைத்துள்ள அறிவுறுத்தல்களுக்கு உங்கள் கவனத்தை செலுத்தி வேலை நிறுத்த அச்சுறுத்தல் அல்லது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் அல்லது வேறு எந்த வகையான போராட்டங்களிலும் பங்கேற்பது அரசு அலுவலகங்களின் இயல்பான செயல்பாட்டை பாதிக்கும். விதிகளை மீறுவதாகும். எனவே தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நடத்தை விதிகள் 1973ன் விதிகளை மீறி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு உங்கள் துறையின் அரசு பணியாளர்களின் வருகையை இன்று கவனமாக பதிவிட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் சேவை சங்கங்களால் நடத்தப்படும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதின் விளைவாக அரசு ஊழியர்கள் எவரேனும் அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் அவர்கள் பணிக்கு வரவில்லை என்று கருதப்பட வேண்டும். பகுதி நேர பணியாளர்கள், தினசரி ஊதியம் பெறுவோர் மற்றும் ஒருங்கிணைந்த ஊதியத்தில் இருப்பவர்கள் இந்த 'ஸ்டிரைக்'கில் பங்கேற்றாலும் அவர்களுக்கு சம்பளம் பிடித்தம் செய்ய வேண்டும். பணியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

எனவே தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதியை எந்த அரசு ஊழியரும் மீறுவதில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். விதிகள் 1973ன்படி ஊழியர்களால் அங்கீகரிக்கப்படாமல், பணியில் இல்லாமல் இருந்தால் உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வேலை நிறுத்த நாளில் சாதாரண விடுப்பு அல்லது மருத்துவ விடுப்பு தவிர வேறு ஏதேனும் விடுப்புக்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படாது.

எனவே இன்று யாரேனும் பணிக்கு வராமல் விதிகளை மீறி இருந்தால் அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். பணிபுரியும் ஊழியர்களின் வருகை நிலை குறித்த அறிக்கையை காலை 10.15 மணிக்குள் எடுத்து இ.மெயில் மூலம் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்



மரம் வளர்ப்போம்! மழை வளம் பெறுவோம்!
பிளாஸ்டிக் தவிர்ப்போம்! மண் வளம் காப்போம்!

2023-24 முதல் 2024-25 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விபர சுருக்கம்

| வ. எண் | ஆண்டு | திட்டத்தின் பெயர் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. (இலட்சம்) |
|---|---|---|---|---|
| 1 | 2023-24 | 15வது நிதி ஆணைய டைய்டு மானியம் | 4 | 52.00 |
| 2 | 2023-24 | ஆறாவது நிதிக்குழு மான்யம் | 4 | 249.00 |
| 3 | 2023-24 | அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் | 2 | 10.00 |
| 4 | 2023-24 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | 6 | 427.29 |
| 5 | 2023-24 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 8 | 32.00 |
| 6 | 2023-24 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 2 | 35.00 |
| 7 | 2023-24 | நமக்கு நாமே திட்டம் | 1 | 3.00 |
| 8 | 2023-24 | பொதுநிதி | 29 | 159.42 |
| 9 | 2023-24 | 15வது நிதிக்குழு அன்ட் டைய்டு மான்யம் –2ம் தவணை | 1 | 26.00 |
| 10 | 2023-24 | 15வது நிதிக்குழு டைய்டு மான்யம் –2ம் தவணை | 2 | 40.00 |
| 11 | 2022-23 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 1 | 66.41 |
| 12 | 2024-25 | பொதுநிதி | 2 | 19.90 |
| 13 | 2023-24 | அங்கன்வாடி பழுது சிரமைத்தல் | 4 | 1.44 |
| 14 | 2024-25 | அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் | 3 | 20.00 |
| 15 | 2024-25 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 2 | 20.00 |
| 16 | 2024-25 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் | 1 | 44.00 |
| 17 | 2024-25 | 15வது நிதிக்குழு டைய்டு மான்ய நிதி (முதல் தவணை) | 2 | 40.00 |
| 18 | 2024-25 | 15வது நிதிக்குழு அன்ட் டைய்டு மான்ய நிதி (முதல் தவணை) | 2 | 30.00 |
| 19 | 2024-25 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் | 1 | 110.00 |
| 20 | 2024-25 | பொதுநிதி | 2 | 23.85 |
| | | பெரு மொத்தம் | 79 | 1409.31 |

மக்கும், மக்காத குப்பை கழிவுகளை தரம் பிரித்து வழங்குவோம்!

திரு. S.சரவணன்
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்

திரு. இரா.இராஜா
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

திரு.மு.சேக் சிக்கந்தர் பாட்சா
பேரூராட்சி மன்ற தலைவர், நத்தம்

திரு. எம்.விஜயநாத்
செயல் அலுவலர், நத்தம் பேரூராட்சி

திருமதி. ச.மகேஷ்வரி
பேரூராட்சி மன்ற துணைத்தலைவர், நத்தம்

பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள்
சு.வசந்த சுஜாதா, சி.கலாவதி, இரா.இராதிகா, கா.ராமு, சு.கண்ணன், பெ.பழனிகுமார், ரா.உமாமகேஸ்வரி, பீ.சகுபர் சாதிக்,, மு.இஸ்மாயில், க.உசன்பரிதா, மா.லதா, செ.சுமதி, கு.வைதேகி,, க.விஜயவீரன், ப.சிவா, சு.மாரிமுத்து
மற்றும் அலுவலக பணியாளர்கள்

# இலவச கல்வி சுற்றுலாவை துவக்கி வைத்த ஆட்சியர்




கடலூர், டவுன்ஹால் அருகே மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் ஆரம்ப நிலை பயிற்சி மைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒரு நாள் இலவச கல்வி சுற்றுலாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# வண்ணான்குட்டை ஏரி புனரமைக்கும் பணி



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, மூஞ்சூர்பட்டு ஊராட்சியில் உள்ள வண்ணான்குட்டை ஏரியை பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதியில் ரூ.8.42 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூர்வாரி புனரமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு விளையாட்டு போட்டி



புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், புதுக்கோட்டை சார்பில், பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்கீழ், மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா துவக்கி வைத்தார்.

## தலையங்கம்

**மாலை எக்ஸ்பிரஸ்**

19.3.2025 (புதன்கிழமை)

# மியூச்சுவல் பண்ட்

ஒவ்வொரு மனிதனும் சேமிப்புக்காக வங்கிகளில், தபால் நிலையங்களில் டெபாசிட் செய்கிறார்கள். பங்கு சந்தையில் பங்குகள் வாங்குகிறார்கள். தங்கத்தில் முதலீடு செய்கிறார்கள். நிலம் வாங்குகிறார்கள். வீடுகள் வாங்குகிறார்கள். இப்படி அவர்கள் பல முதலீடுகளை மேற்கொள்ளும்போது சேமிப்புகள் உயர்ந்துவருகிறது. இப்போது வங்கி டெபாசிட்டுகளை விட மக்கள் பரஸ்பர நிதி என்று சொல்லப்படும் மியூச்சுவல் பண்டுகளில் அதிக முதலீடு செய்கிறார்கள்.

மியூச்சுவல் பண்ட் என்பது முதலீட்டாளர்களிடம் இருந்து பணத்தை திரட்டி பங்குகள், பத்திரங்கள் போன்ற பலவற்றில் முதலீடு செய்யும் ஒரு முதலீட்டு வழிமுறை ஆகும். இவ்வாறு மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் ஏதாவது ஒரு பண்டில் முதலீடு செய்கிறார்கள். அந்த மியூச்சுவல் பண்ட் தொழில்முறை நிபுணர்களால் நிர்வகிக்கப்பட்டு, அந்த பண்டில் முதலீடு செய்யப்பட்ட பணம் பல்வேறு நிறுவன பங்குகளிலும், பத்திரங்களிலும் முதலீடு செய்யப்படுவதன் மூலம் வருமானம் கிடைக்கிறது. அந்த வருமானம் முதலீட்டாளர்களுக்கு விகிதாசார முறையில் பகிர்ந்து தரப்படுகிறது. இப்போது பங்கு பரிவர்த்தனைகள் ஏற்ற, இறக்கங்களுடன் நடப்பதால் பங்குகளில் நேரடி முதலீடு செய்ய பொதுமக்கள் தயங்குகிறார்கள். எனவே இப்போது அவர்களின் சேமிப்புகள் மியூச்சுவல் பண்ட் வாங்குவதிலும், வங்கிகளில் நிரந்தர டெபாசிட்டுகளில் முதலீடு செய்வதிலும், வங்கிகளில் கடன் வாங்கி வீடுகள் வாங்குவதிலும்தான் இருக்கிறது. ஆனால் கடந்த 11 மாதங்களில் வங்கிகளில் நிரந்தர டெபாசிட் செய்யப்பட்ட தொகையை விட மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்யப்பட்ட தொகையின் விகிதம்தான் அதிகமாக இருக்கிறது.

இந்த காலக்கட்டத்தில் வங்கிகளில் போடப்பட்டுள்ள நிரந்தர டெபாசிட்டுகளின் வளர்ச்சி 9.2 சதவீதமாக, அதாவது ரூ.17.29 லட்சம் கோடியாக மட்டுமே உயர்ந்து இருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் வங்கிகளின் நிரந்தர டெபாசிட்டுகளின் வளர்ச்சி 11.2 சதவீதமாக அதாவது ரூ.18.69 லட்சம் கோடி அளவில் இருந்ததாக ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த 11 மாத காலக்கட்டத்தில் மியூச்சுவல் பண்டின் முதலீடுகள் ரூ.9.79 லட்சம் கோடியாக இருக்கிறது. இது கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் ரூ.5.14 லட்சம் கோடியாகத்தான் இருந்தது. அதாவது 90 சதவீத வளர்ச்சி அடைந்துள்ளது. மொத்தத்தில் வங்கி டெபாசிட்டுகளின் வளர்ச்சியை மியூச்சுவல் பண்டின் வளர்ச்சியோடு ஒப்பிட்டால் குறைந்துக்கொண்டு வருகிறது.

இதற்கான காரணம் குறித்து நிதி நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி, இளம் தலைமுறையினர் நீண்டகால செல்வத்துக்காக கூடுதல் அபாயத்தை ஏற்க தயாராக இருப்பதால் மியூச்சுவல் பண்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், வங்கி டெபாசிட்டுகளில் போடப்படும் முதலீடுகளைவிட தொடர்ந்து அதிகமாகத்தான் இருக்கும். புதிய வருமான வரி விதிப்பு முறையில் '80 சி' வருமான வரி சலுகை, சேமிப்பு டெபாசிட்டுகளுக்கு இல்லை என்பதும், இப்போது வங்கிகளில் உள்ள 5 ஆண்டு நிரந்தர டெபாசிட்டுகளுக்கு அதிக ஈர்ப்பு இல்லை என்பதும் மியூச்சுவல் பண்டில் இளைய சமுதாயத்தை அதிக அளவில் முதலீடு செய்ய வைக்கிறது.

# யுகாதி ஆஸ்தானம்: திருப்பதியில் தரிசன முறையில் மாற்றம்



**திருப்பதி, மார்ச் 19-**

*யுகாதி பண்டிகையை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பக்தர்களுக்கான தரிசன முறையில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.*

*மார்ச் 30ம் தேதி தெலுங்கு வருடப் பிறப்பான ஸ்ரீ விஷ்வவசு நாம தெலுங்கு யுகாதி பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி மார்ச் 25ம் தேதி கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற உள்ளது. பாரம்பரிய முறைப்படி கோவிலை சுத்தம் செய்யும் நடைமுறைக்காக அன்று காலை 6 மணி முதல் 10 மணி வரையிலான 4 மணி நேரம் அனைத்து தரிசனங்களும் ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற உள்ளதால் மார்ச் 25ம் தேதி நடைபெறும் அஷ்டதல பாத பத்மாராதனை சேவை ரத்து செய்யப்படுவதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது. அதே போல் யுகாதி அஸ்தனத்தை முன்னிட்டு மார்ச் 30ம் தேதி, சகஸ்ர தீபஅலங்கார சேவை தவிர மற்ற அனைத்து ஆர்ஜித சேவைகளும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மார்ச் 25 மற்றும் மார்ச் 30 ஆகிய தேதிகளில் விஐபி பிரேக் தரிசனத்திற்கு விஐபி புரோட்டோகால் அடிப்படையில் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 24 மற்றும் 29 ஆகிய இரு நாட்களும் விஐபி தரிசனத்திற்காக எந்த பரிந்துரை கடிதமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் கூறி உள்ளது. பக்தர்கள் இதை கவனத்தில் கொண்டு திருப்பதி தேவஸ்தானத்தின் மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தேவஸ்தானம் கேட்டுக் கொண்டுள்ளது.*

# முதல்வருடன் துணைவேந்தர் சந்திப்பு



புதுச்சேரி, மார்ச் 19–

புதுவைப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பொறுப் பேற்றுக்கொண்ட பனித்தி பிரகாஷ் பாபு, முதலமைச்சர் ரங்கசாமியை முதலமைச்சர் அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இச்சந்திப்பின்போது புதுவைப் பல்கலைக்கழக இயக்குநர் (கல்வி) தரணிக்கரசு, பதிவாளர் (பொறுப்பு) ரஜினிஷ் புட்டானி ஆகியோர் உடனிருந்தனர்.

# மகாராஷ்டிரா முதலமைச்சருடன் சபாநாயகர் செல்வம் சந்திப்பு



புதுச்சேரி, மார்ச் 19–

மும்பை சென்றுள்ள புதுச்சேரி சபாநாயகர் செல்வம், மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பட்னவிஸ்சை சந்தித்து பேசினார்.

சந்திப்பின்போது இந்திய சுதந்திர பவள விழாவை முன்னிட்டு சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளை போற்றும் வகையில் நாடு முழுவதும் 101 இடங்களில் தியாகிகளின் பெயர் பொறித்த தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அந்த வகையில், மகாராஷ்டிரா மாநிலத்தில் 9 இடங்களில் அமையப்பட உள்ள தியாகப் பெருஞ்சுவர் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் சக்ரா பவுண்டேசன் நிறுவனத் தலைவர் ராஜசேகரன், புதுச்சேரி மாநில பாஜக இளைஞரணி செயலாளர் வருண் உடனிருந்தனர்.

## புதுச்சேரியில் கடல் அரிப்பை தடுக்க

# ரூ.1,000 கோடியில் 24 கி.மீ., தூரத்திற்கு அரண் அமைக்கப்படும்

## பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் அறிவிப்பு

புதுச்சேரி, மார்ச் 19–

புதுச்சேரியில் ரூ.1,000 கோடியில் கடல் அரிப்பினை தடுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என பொதுப் பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் அறிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, கடல் அரிப்பினால் மீனவ கிராமங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவது குறித்து சரமாரியாக எம்.எல்.ஏ.க்கள் கேள்வி எழுப்பினர்.

எதிர்க்கட்சி தலைவர் சிவா: மீன்வளத்தை பெருக்கும் வகையில் கடலோர கிராமங் செயற்கை பாறை திட்டுக்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த திட்டம் எந்த நிலையில் உள்ளது.

அமைச்சர் லட்சுமி நாராயணன் செயற்கை பாறை திட்டுக்கள் அமைக்க ரூபாய் 4.34 கோடியில் மத்திய அரசின் நிர்வாக, செலவின ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. செயற்கை பாறை திட்டுகள் அமைக்க பொருத்தமான இடங்கள் கண்டறியப் பட்டுள்ளது. புதுச்சேரியில் 10 இடங்களிலும், காரைக்காலில் 4 இடங்களிலும், செயற்கை பாறை திட்டுகள் வார்க்கும் பணி இந்த மாதத்தில் துவங்கப்படும்.



எதிர்க்கட்சி தலைவர் சிவா: புதுச்சேரியில் கடல் அரிப்பினால் மீனவ கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றன. கடல் அரிப்பினை தடுக்க எந்தெந்த கடலோர கிராமங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் லட்சுமிநாராயணன்: புதுச்சேரி கடலோர மீனவ கிராமங்களில் தூண்டில் முள் வளைவு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குருசுகுப்பம், வைத்திகுப்பம்,சோலை நகர் கிராமங்களில் தூண்டில் முள் வளைவு முறையில் பாறைகள் கொட்டி அரண் அமைக்கப்பட உள்ளது. செலவு மதிப்பீட்டை தயாரிக்க பொதுப் பணித்துறைக்கும், மத்திய அரசின் மீன்வளத் துறைக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு மீன்வளத் துறையிடமிருந்து இத்திட்டத்திற்கு நிதி உதவிக்கான ஒப்புதல் இதுநாள் வரை கிடைக்கவில்லை. எனவே நபார்டு வங்கி மூலம் கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர்சிவா: நபார்டு வங்கி மூலம் எந்த திட்டத்தையும் எளிதில் செயல்ப டுத்த முடியாது. வில்லியனூர் தொகுதியில் நபார்டு வங்கி மூலம் செயல்படுத்த முயற்சி எடுத்த திட்டங் கள் 20 ஆண்டாக கிடப் பில் கிடந்தது. கடலோர பகுதிகளை ஆய்வு செய்து மீனவர்களின் வாழ்வாதார பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்யாணசுந்தரம் (பாஜக): பொதுப்பணித்துறை அமைச்சர் தன்னுடைய கடலோர கிராமங்களில் மட்டும் பாறைகள் கொட்டி கடல் அரிப்பு தடுக்கப் படும் என கூறுகிறார். காலாப்பட்டில் மீனவ கிராமங்கள் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது. தூண்டில் முள் வளைவு அமைக்கும் பணி இது வரை நடைபெறவில்லை. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளனர். காலதாமதம் ஆனால் பல பிரச்னைகள் உருவாகும்.

அனிபால் கென்னடி(திமுக): இந்தத் திட்டத்தில் என்னுடைய தொகுதியின் வம்பா கீரப்பாளையத்தையும் சேர்க்க வேண்டும்.

அமைச்சர் லட்சுமிநாராயணன்: புதுச்சேரியில் 24 கி.மீ., தூரம் உள்ள கடலோர பாதுகாப்பை வலுப்படுத்த ரூ.1000 கோடியில் திட்டமிட்டுள்ளோம். அதில் காலாப்பட்டு உட்பட அனைத்து மீனவ கிராமங்களையும் சேர்த்து தான் கடல் அரிப்பு திட்டம் உருவாக்கப்படுகின்றது. உலக வங்கி நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் 2 துறைகள் தற்போது அனுமதி வழங்கி உள்ளன. இன்னும் சில துறைகளின் அனுமதி கிடைக்க வேண்டும். இதன் பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நாகதியாகராஜன் (திமுக):

காரைக்கால் மீனவ கிராமங்களிலும் கடல் அரிப்பு ஏற்படுகின்றது. அங்கேயும் இத்திட்டத்தை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

அமைச்சர் லட்சுமிநாராயணன்: காரைக்கால் மீனவ கிராமங்களுக்கு திட்டத்தை ஆரம்பிக்க விரிவான திட்ட அறிக்கை தேவை. என்.சி.சி.ஆர்., திட்டத்தின் கீழ் இந்திய தொழில் நுட்ப நிறுவனத்திடம் இது குறித்து கலந்து ஆலோசித்து செயல்படுத்தப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

# காரைக்கால் திருநள்ளாரில் அரசு மருத்துவ கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை

## முதலமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு

புதுச்சேரி, மார்ச் 19–

புதுச்சேரி சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது நடந்த விவாதம் வருமாறு ரமேஷ் (என்.ஆர்.காங்): இந்திராகாந்தி அரசு மருத் துவக்கல்லூரி மருத்து வமனைக்கு வெளிப்புற நோயாளிகள் அதிகமாக வருகின்றனர். ஆனால் செவிலியர்கள் பற்றக்குறையாக உள்ளது. ராமலிங்கம் (பா.ஜ.); அங்கு செவிலியர் பற்றாக்குறை உள்ளதால் பணிசுமையும் அதிகரித்துள்ளது. விரைவாக செவிலியர்களை அரசு நியமிக்க வேண்டும்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** அரசு மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 226 செவிலியர்களை நிரப்ப கோப்பு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் செவிலியர்கள் நியமிக்கும்போது அனைத்தும் சரியாகும்.

**ரமேஷ் (என்.ஆர்.காங்):** இந்த கோப்பினை பற்றி நானும் விசாரித்தேன். ஆனால் இந்த கோப்பு சுற்றி சுற்றி தான் வருகிறது. செவிலியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. தற்போது அரசு மருத்துவக் கல்லூரியில் 147 செவிலியர்கள் மட்டும் தான் பணியில் உள்ளனர் அவர்களால் அங்கு வரும் நோயாளிகளை சமாளிக்க முடியவில்லை.



**அங்காளன் (சுயேச்சை):**என்.எச்.ஆர்.எம்.. எனும் தேசிய சுகாதார முகமை யில் பணியாற்றும் செவிலியர்களை இந்திரா காந்தி அரசு மருத்துவக்கல்லூரியில் செலியர்களாக நியமிக்கலாம். கொரோனா காலத்தில் உயிரை பணயம் வைத்து பணியாற்றியுள்ளனர், அவர்களுக்கு அங்கு வாய்ப்பும், முன்னுரிமையும் அளிக்க வேண்டும்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** தேசிய சுகாதார முகமை செவிலியர் ஊழியர்களை அரசு துறைகளில் நியமிக்க மத்திய அரசுக்கு அனுமதி வழங் கவில்லை. அதனால் அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தி கொடுக்கப்பட் டது. அவர்களைபோலவே நான் கிளினிக் எனப்படும் மருத்துவம் சாராத முகமை ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

செவிலியர்களை நியமிக்கும் கோப்பு சுற்றி, சுற்றித்தான் வருகிறது. கல்லூரி சொசைட்டியின் கீழ் செயல்படுவதால் பொதுக்குழுவில் செவிலியர்களை நியமிக்க முடிவெ டுத்துள்ளோம்.

**பி.ஆர்.சிவா (சுயேச்சை):** காரைக்காலில் அரசு மருத்து வக்கல்லூரி மருத்துவமனை எப்போது கட்டும் திட்டம் உள்ளது.

**முதலமைச்சர் ரங்கசாமி:** காரைக்காலில் அரசு பொது மருத்துவமனை அவசியம் தேவை. இதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம். சபாநாயகரும் மத்திய அமைச்சரை சந்தித்து பேச உள்ளார். விரைவில் அனுமதி பெற்று காரைக்கால் திருநள்ளாறில் அரசு மருத் துவக்கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

# பாரததேவி ஆங்கில உயர்நிலை பள்ளி 45வது ஆண்டு தின விழா




புதுச்சேரி, மார்ச் 19–

புதுவை மாநிலம் மதுகடைப்பட்டு பகுதியில் அமைந்துள்ள பாரததேவி ஆங்கில உயர்நிலை பள்ளியின் 45ம் ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் மதிப்புமிக்க விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்ச்சியில் தலைமை உரையை பழனி வழங்கி விழாவை சிறப்பித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மோகன் புதுச்சேரி கல்வித்துறை தலைமை கல்வி அலுவலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கம் அளித்தார்.

மேலும், கல்வித்துறையில் சிறப்பிடம் பெற்ற பாலாஜி (பொது கல்வி துறைத் தலைவர், கணினி அறிவியல் துறைத் தலைவர், பேராசிரியர் மற்றும் பாஞ்ச் ராமலிங்கம் (தலைவர், உளவியல் துறை, புதுச்சேரி பல்கலைக்கழகம்) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மதிப்பீட்டு நிகழ்ச்சியில் புதுச்சேரி தனியார் சுயநிதி பள்ளிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர். டி. ரங்கநாதன் தலைமையில், சங்கத்தின் உயர்பதவியிலுள்ள முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். முருகையன் துணைத்தலைவர், ராமசிவராஜன் பொதுச் செயலாளர், டாக்டர். எம். சம்பத் இணைச் செயலாளர், டாக்டர். வி. சிவசுப்ரமணியன், பொருளாளர் நிகழ்ச்சியின் வரவேற்புரையை இளமதியழகன், பாரததேவி ஆங்கில உயர்நிலை பள்ளியின் தலைமையாசிரியர் வழங்கி, சிறப்பு விருந் தினர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இவ்விழாவின் சிறப்பம்சமாக, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அரங்கத்தை அலங்கரித்த கலைநிகழ்ச்சிகள், பார்வையாளர்களை பரவசத்துடன் ஈர்த்தன. மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் இசை, நடனம், நாடகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன.

பள்ளியின் 45வது ஆண்டு தின விழா வெற்றிகரமாக நடத்தப்பட்டு, கல்வி, கலாச்சாரம் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பள்ளியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. வெற்றியாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

# கோவில்பத்து ஓமக்குளம் பகுதியில் கலெக்டர் ஆய்வு

காரைக்கால், மார்ச் 19–

காரைக்கால் கோவில்பத்து ஓமக்குளம் பகுதியில், நரிக்குறவர்கள் வசிக்கும் பகுதியில் கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் ஆய்வு செய்தார். அப்போது பெண்கள் மகளிர் குழுவில் இணைந்து அரசின் நலத்திட்டங்களை பெற வேண்டும். என கலெக்டர் அறிவுறுத்தினார்.

காரைக்கால் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட கோவில்பத்து ஓமக்குளம் பகுதியில், நரிக்குறவர் வசிக்கும் பகுதியில் போதிய கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் எல்.ஜி.ஆர் பட்டா வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் காரைக்கால் மாவட்ட கலெக்டர்சோமசேகர் அப்பாராவிடம் அண்மையில் கோரிக்கை மனு அளித் தனர்.பொதுமக்கள் இக்கோரிக்கையை அடுத்து, காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் நேற்று காலை கோவில்பத்து ஓமக்களம் பகுதியில், நரிக்குறவர் வசிக்கும் பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்பகுதி பொது மக்களிடம் கலந்துரையாடிய மாவட்ட கலெக்டர், அங்கு போதிய கழிவறை, குடிநீர் வசதிகள் உள்ளதா, வீடுகளில் கழிவறைகள் இருக்கிறதா என பொது மக்களின் தேவைகள் குறித்து முழுமையாக கேட்டு அறிந்தார்.



பின்னர் மாவட்ட கலெக்டர் சோமு சேகர் அப்பாராவிடம் அப்பகுதி பொதுமக்கள் பேசுகையில் குடிநீர் வசதி போதிய அளவில் இல்லை. கழிவறை வசதி எந்த வீட்டிலும் இல்லை. எனது நகராட்சி மூலம் போதிய கழிவறை வசதிகள் கட்டி தர வேண்டும். வீடு இல்லாத குடும்பத்தினருக்கு அரசாங்க மூலம் வீடு கட்டி தர வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். இளநிலை படிப்பு முடித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சில வீடுகளில் மின் வசதி இல்லை. அவர்களுக்கு மின்வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்களிடம் கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் பேசியதாவது: பெண்கள் மகளிர் குழுவில் இணைந்து அரசின் நலத்திட்டங்களை பெற வேண்டும். இங்கு உள்ள குழந்தைகளை அங்கன்வாடியில் சேர்த்து பயன்பெற வேண்டும். சுகாதாரத்துறை மூலம் வரும் ஆஷா பணியாளர்களிடம் ஆயுஷ்மான் பாரத் அட்டையை விண்ணப்பித்து பயன்பெற வேண்டும். குழந்தைகளை கண்டிப்பாக பள்ளிக்கு அனுப்ப வேண்டும். யாரையும் பள்ளிகளில் இடைநிறுத்த கூடாது. பட்டா இடங்களில் ஏதேனும் வீடு கட்டுவதற்கு உதவிகள் தேவைப் பட்டால் மாவட்ட நிர்வாகத்தை அணுகலாம். காரைக்கால் நகராட்சி மூலம் பொது கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி தரப்படும். கூடுதல் குடிநீர் குழாய்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். தொடர்ந்து திருநகர் பகுதியில் மேம்படுத்த வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது காரைக்கால் நகராட்சி ஆணையர் சத்யா, நகராட்சி செயற்பொறியாளர் லோகநாதன், நகராட்சி உதவி பொறியாளர் ஜோதிபாசு மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# திருச்சியில் ரத்ததான முகாம்





**திருச்சி, மார்ச் 19-**

சர்வதேச We Love U நல அமைப்பின் சார்பில் 753வது உலகளாவிய இரத்ததான முகாம் உலகளாவிய நல அமைப்பான International We Love U தலைவர் ஜாங் கில்ஜா தலைமையில் திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த ரத்ததான முகாமிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக 11வது வார்டு திமுக மாமன்ற உறுப்பினர் விஜய ஜெயராஜ் மற்றும் உறையூர் பகுதி கழக செயலாளர் இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த ரத்ததான முகாமில் சர்வதேச We Love U நல அமைப்பின் உறுப்பினர்கள் 150க்கும் மேற்பட்டோர் ரத்ததானம் செய்தனர். சர்வதேச We Love நல்ல அமைப்பு கடந்த 2004 இல் கொரியாவில் தொடங்கி 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டு வரும் ஒரு உலகளாவிய உயிர்காக்கும் இயக்கமாகும். இது 64 நாடுகளில் நடைபெற்றது. இது ரத்தப் பற்றாக்குறையைத் தீர்க்க உதவுவதில் மட்டுமல்லாமல், உலக சுகாதார அமைப்பின் குறிக்கோளான தன்னார்வ, ஊதியம் பெறாத இரத்த தானத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், ரத்த தான கலாச்சாரத்தைப் பரப்புவதிலும் நேர்மறையான பங்கை வகித்து வருகிறது.

மேலும், உலகளாவிய நல அமைப்பான International We Love U தலைவர் ஜாங் கில்ஜா அவர்கள் அனைத்து தன்னார்வ உறுப்பினர்களையும், குறிப்பாக இந்தியாவில் உள்ளவர்களையும் ஊக்குவிக்க உலகளவில் அவர் பல முயற்சிகளை மேற்கொண்டார். 2021ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் இரண்டு முறை Cleaning moment மற்றும் ஒறு முறை Blood Drive மேற்கொண்டுள்ளனர். திருச்சியில் ஒறு முறை Cleaning Moment மற்றும் இரண்டு முறை Blood Drive மற்றும் கோவிட் 19 போன்ற நெருக்கடியான சூழ்நிலையிலும் நடத்தப்பட்டது.

மேலும் தலைவர் ஜாங் கில்ஜாவினி அன்பைப் பரப்ப முயற்சி செய்து உலகம் முழுவதும் தன்னார்வ சேவைகளைச் செய்கிறார், மேலும் வரும் மார்ச் 23ம் தேதி அன்று சென்னை கோயம்பேட்டில் இரத்ததான முகாம் நடைபெறுகிறது. இதில் we love உறுப்பினர்கள் ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் எப்போதும் தாய்மார்களின் அன்பைப் பகிர்ந்து கொள்கிறது. மேலும் திருச்சியில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாமிற்கான ஏற்பாடுகளை சர்வதேச We Love U நல அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் ராகேஷ், மற்றும் பாஸ்கர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா

**கயத்தாறு, மார்ச் 19-**

கயத்தாறில் தமிழக அரசு சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இவ்விழா தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன் தொடங்கியது.

விழாவிற்கு வந்த அனைவரையும் வட்டார ஒருங்கிணைப்பாளர் சுபாஷினி வரவேற்புரை ஆற்றினார். பேரூராட்சி மன்ற தலைவர் சுப்புலட்சுமி ராஜதுரை குத்துவிளக்கு ஏற்றார். இந்த நிகழ்ச்சியில் திட்ட விளக்கவுரையாக கயத்தாறு வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பா.சரளா தேவி விளக்க உரையாற்றினார்.





இந்த நிகழ்ச்சியில் கடம்பூர் பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்பிஎஸ்பி நாகராஜா, கயத்தார் திமுக கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சின்னபாண்டியன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் செல்விரவிக்குமார், கயத்தாறு வட்டார வளர்ச்சி அலுவலர் பாண்டியராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் கயத்தாறு பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தேவி, தங்கப்பாண்டி, கோகிலா மற்றும் வார்டு செயலாளர்கள் ஜமால், முன்னாள் பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் சந்தானம், சேக் தாவூது ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாலை அணிவித்து, சந்தனம் குங்குமம் வைத்து, புதுசேலை வழங்கி அவர்களுக்கு ஆறு வகையான அறுசுவை உணவு வழங்கினார்கள். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கயத்தாறு வட்டார அங்கன்வாடி ஊழியர்கள் செய்திருந்தனர்.

# வைஸ்யா கல்லூரியில் பட்டமளிப்பு விழா



**சேலம், மார்ச் 19-**

சேலம் வைஸ்யா கல்லூரியில் 2024 ஆம் கல்வியாண்டில் இளங் கலை மற்றும் முதுகலை பாடப்பிரி வில் பயின்று முடித்த மாணவர் களுக்கு பட்டமளிப்பு விழா நடை பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக பெரியார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துச்செழியன் பங்கேற்று மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். தன்னம்பிக்கை பேச் சாளர் புலவர் ராமலிங்கம் மாண வர்களிடையே சிறப்புரையாற்றி னார். இன்றைய மாணவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் வெற்றி பெற பெற்றோர்களையும், பேராசிரியர்களையும் மதித்து தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கூறினார். கல்லூரியின் தலைவர். சிவானந்தம் மற்றும் தாளாளர் ராஜேந்திர பிரசாத் ஆகியோர் பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற தலைமையேற்று வழிநடத்தினர்.

முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர் வெங்கடேசன் சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்து வரவேற்புரை ஆற்றினார். துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தினர். இவ்விழாவில் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நாட்டுப் பண்ணுடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.

# அம்மன் கழுத்தில் இருந்த நகை திருட்டு




**விழுப்புரம், மார்ச் 19-**

விழுப்புரம் அருகே காணை– திருக்கோவிலூர் மெயின் ரோட்டில் அமைத்துள்ளது அழகு நாச்சியம்மன் கோவில். இக்கோவிலில் மர்ம நபர்கள் யாரோ கோவில் பூட்டை உடைத்து அம்மனின் கழுத்தில் இருந்த தங்க தாலி உண்டியலில் உள்ள பணத்தை கொள்ளையர்கள் கொள்ளை அடித்து சென்றுவிட்டனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஆய்வாளர் கல்பனா மற்றும் காணை காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் கோவில் பூட்டை உடைத்து யார் என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்ள புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் யாவை? வைத்திலிங்கம் எம்பி கேள்வி

**புதுச்சேரி, மார்ச் 19-**

காங்கிரஸ் கட்சியின் புதுச்சேரி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் நடைபெற்று வரும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் மத்திய அரசு புதுச்சேரியில் ராஜீவ் காந்தி சந்திப்பில் இருந்து மரப்பாலம் சந்திப்பு வரையிலும் மற்றும் மரப்பாலம் சந்திப்பிலிருந்து கடலூர் நோக்கி செல்லும் நெடுஞ்சாலையிலும் இருக்கும் போக்குவரத்து நெரிசலை பற்றி அறியுமா, ஆமெனில் விவரம் என்ன? இந்த போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்ள புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் யாவை? (மேலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட அனுமதி வழங்க உத்தேசிக்கப்



பட்டுள்ள திட்டங்கள் யாவை எனவும் (ஈ) 2024–25 நிதி ஆண்டில் புதுச்சேரிக்கு நெடுஞ் சாலை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதி எவ்வளவு என்றும் 2025–26க்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்றும் எழுப்பிய கேள்விக்கு மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நித்தின் கட்கரி அளித்துள்ள பதிலில் கூறியிருப்பதாவது: புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசலை மத்திய அரசு அறியும். தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பான மற்றும் இலகுவான போக்குவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் பிரதம மந்திரி கதி சக்தி தேசிய மாஸ்டர் பிளான் திட்டத்தின் படி முன்னுரிமை அடிப்படையிலும் போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் புதுச்சேரியில் மூன்று திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு உத்தேசித்துள்ளது. ராஜீவ் காந்தி சதுக்கம் மற்றும் இந்திரா காந்தி சதுக்கம் உள்ளடக்கிய சாலையை மேம்படுத்துவது, புதுச்சேரியில் இருந்து கடலூர் செல்லும் 20 கிலோமீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், ராஜீவ் காந்தி சதுக்கத்திலிருந்து மரக்காணம் மார்க்கமாக செல்லும் 13 கிலோமீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தல்.

2024–2025 நிதியாண்டில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் நடந்து கொண்டிருக்கும் பணிகளுக்கு ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2025–26 நிதி ஆண்டில் புதுச்சேரி அரசுக்கு தேசிய நெடுஞ்சாலை மேம்பாடு செய்வதற்கான தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்வதை மத்திய அரசு உறுதி செய்யும். இவ்வாறு அவர் தனது பதிலில் கூறியுள்ளார்.

# சுகாதார நிலையங்களில் தீயணைப்பு அதிகாரி ஆய்வு



திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல்படி தமிழ்நாடு அனைத்து தீ தடையின்மை சான்று வழங்க துணை சுகாதார நிலையங்களில் கன்னிவாடி ஸ்ரீராமபுரம் ஒட்டன்சத்திரம் சுற்றுவட்டாரம் பகுதிகளில் ஒட்டன்சத்திரம் தீயணைப்பு துறை அலுவலர் ராஜேந்திரன் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# தேனூர் சமுதாய நலவழி மையத்தில் 108 ஆம்புலன்ஸ் டிரைவரை கூடுதலாக நியமிக்க ஆவண செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்: மனிதநேய மக்கள் கட்சி கோரிக்கை

**காரைக்கால், மார்ச் 19-**

தேனூர் சமுதாய நலவழி மையத்தில், 108 ஆம்புலன்ஸ் ஓட்ட ஒரு புதிய டிரைவரை கூடுதலாக நியமிக்க ஆவண செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜா முகமது கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைக்கல் மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜா முகமது,



இதுகுறித்து மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறி இருப்பதாவது: காரைக்கால் திருநள்ளாறை அடுத்த தேனூர் சமுதாய நலவழி மையத்தில், 108 ஆம்புலன்ஸ் டிரைவர்கள் பற்றாக்குறை காரணமாக விடுப்பில் செல்லும் டிரைவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்ய முடியாமலும், இரவு நேர பணியில் இருக்கும் டிரைவர்களுக்கு Off Leave கொடுக்கும்போது டிரைவர்கள் இல்லாமால் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளிகளை மேல் சிகிச்சை பெற காரைக்கால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் இல்லாமல் பல மணி நேரம் காத்திருந்து நோயாளிகள் பெரும் அவஸ்தை பெற்று வருகின்றனர். வாகனங்கள் பெருத்து வருவதால் விபத்துகள் அதிகமாக நடைபெற்று வருவதை நாம் பார்த்து வருகிறோம் . இந்நிலையில் காரைக்கால் மாவட்டம், தேனூர் சமுதாய நலவழி மையத்தில் (மருத்துவ மனையில்) 108 ஆம்புலன்ஸ் டிரைவர்கள் 4 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 3 பேர் மட்டுமே உள்ளனர். இதனால் மக்கள் படும் அவதியை போக்க போர்க்கால அடிப்படையில் ஒரு காலி இடத்தை நிரப்ப வேண்டும். மேலும் தேனூர் சமுதாய நலவழி மையத்தில், 108 ஆம்புலன்ஸ் ஓட்ட ஒரு புதிய டிரைவரை கூடுதலாக நியமிக்க ஆவண செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அந்த மனுவில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிக்கு உதவித்தொகை பெற்று கொடுத்த ஆட்சியருக்கு குவியும் பாராட்டு




**விழுப்புரம், மார்ச் 19–**

விழுப்புரம் மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மேல்காரணை கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி கோவிந்தன் என்பவர் நிறுத்தம் செய்யப்பட்ட உதவித்தொகை வழங்க வேண்டி அளித்த கோரிக்கை மனுவின் உடனடி தீர்வாக பராமரிப்பு உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் உத்தரவிட்டார்

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், மேல்காரணை கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் என்பவர் தனது மகன் கோவிந்தன் மற்றும் மகள் புவனேஸ்வரி ஆகியோர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலமாக மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை பெற்று வந்த நேர்வில், கடந்த மூன்று மாதங்களாக உதவித்தொகை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை மீண்டும் வழங்க வேண்டும் என தெரிவித்து தனது மாற்றுத்திறனாளி மகன் கோவிந்தன் என்பவருடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து திங்கள் தின கோரிக்கை மனு அளித்துள்ளார்.

மேற்படி இரு மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களது தந்தை வெங்கடேசன் என்பவருடனான இணைப்பு வங்கி கணக்கு எண்ணிற்கு பராமரிப்பு உதவித்தொகை செலுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நேர்வில், உதவித்தொகை DBT - Direct Benefit Transfer முறையில் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்ட நடவடிக்கையில் ஆதார் இரட்டை பதிவு காரணமாக புவனேஸ்வரி என்பவருக்கு திமீதீ 2025 மாதத்திற்கும், கோவிந்தன் என்பவருக்கு ழிஷீஸ்2024 மாதம் முதல் திமீதீ 2025 வரை நான்கு மாதத்திற்கும் உதவித்தொகையானது திரும்ப பெறப்பட்டுவிட்டது. இது தொடர்பாக சென்னை மாற்றுத்திறனாளிகள் 60 ஆணையரகத்திற்கு உரிய தகவல் தெரிவிக்கப்பட்டு மேற்படி இருவருக்கும் தொடர்ந்து பராமரிப்பு உதவித்தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருப்பினும், மனுதாரரின் கோரிக்கையினை கேட்டறிந்த மாவட்ட ஆட்சியா உடனடியாக மேற்படி இரு மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.6000 வீதம் மொத்தம் ரூ.12000 உதவித்தொகை வழங்கியுள்ளார். மேலும், இருவருக்கும் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை தொடர்ந்து வழங்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# குறைதீர்க்கும் கூட்டத்தில் மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு

## அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவு



**விழுப்புரம், மார்ச் 19–**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று மனுதாரர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்கள் மனுக்கள் மீது உடனடியாக கவனம் எடுத்து குறித்த காலத்திற்குள் தீர்வு வழங்கிட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சுமார் 686 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அதில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைபட்டா கோருதல், ஆதரவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டம், உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், முதல்வரின் முகவரி மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி தீர்வு காண அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி மிக்ஷி தேர்வில் தேர்ச்சி பெற்று விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 3 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) முகுந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தமிழரசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## புலியூர் காட்டுச் சாகை அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கூடல் மற்றும் ஆண்டு விழா



**கடலூர், மார்ச் 19–**

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், புலியூர் காட்டு சாகை அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கூடல் மற்றும் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் உதவி தலைமை ஆசிரியர் ஆர்.ரமேஷ் வரவேற்றார். அறிவியல் ஆசிரியை ஆரோக்கிய செல்வி 2024–25 கல்வி ஆண்டு க்கான ஆண்டறிக்கை வாசித்தார். தமிழ் கூடல் நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகள் நடத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சித்தாந்த புலவர், அருள்நிதி பி. முத்துக்குமரன் சிறப்பு விருந்தினராக வருகை தந்து பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார். தேர்வில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல், இரண்டு, மூன்றாம் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும் ஆண்டு விழா கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நூலக வாசகர் வட்டத் தலைவர் கவிஞர் ம. ரா. சிங்காரம் பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். ஆசிரியர்கள் ஜீவகாருண்யா, தமிழ்ச்செல்வி ஆகியோர், வேலாயுதம். முருகானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். சமூக அறிவியல் ஆசிரியை பாக்கியவதி நன்றி கூறினார்.

## சினிமா பட பாணியில் 10 மணி நேரத்தில் நகை திருடிய பெண்களை கைது செய்த போலீசார்



**விழுப்புரம், மார்ச் 19–**

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் தாலுகா ஒடுவன்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் அருண்குமார் என்பவரின் மனைவி ஷாலினி நேற்று மரக்காணத்தில் உள்ள தனது அம்மா வீட்டிற்கு சென்று மாலை தனது வீட்டிற்கு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். மேல்வாலை பேருந்து நிறுத்தத்தில் இறங்கி தனது கைப்பையை பார்த்தபோது அதில் வைத்திருந்த 5 சவரன் நகையை யாரோ திருடிவிட்டதாக கண்டாச்சிபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் உத்தரவின்பேரில் கண்டாச்சிபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் காத்தமுத்து மற்றும் காவலர் ராஜா மற்றும் காவலர்கள் தலைமையில் பேருந்தில் உள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். இதில் இரு பெண்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. மேலும் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த இருவரையும் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்ததில் இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் தெய்வ மங்கலம் கணேஷ் நகரை சேர்ந்த கிருஷ்ணன் என்பவரின் மனைவிகள் காவியா (30), பல்லவி (32) ஐந்து சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டு கண்டாச்சிபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# வேன் டயர் வெடித்து பயணியர் நிழற்குடையில் மோதி 11 பேர் படுகாயம்

**திருவெண்ணெய் நல்லூர், மார்ச் 19–**

திருவெண்ணெய் நல்லூர் அருகே வேன் டயர் வெடித்து நிழற்குடையில் மோதிய விபத்தில் குழந்தைகள் உள்பட 11 பேர் படுகாயம் அடைந்தனர். கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள பூமடுவங்கரை கிராமத்தை சேர்ந்தவர் முருகேசன் மகன் அன்பு கேசவன்(49). இவர் விழுப்புரம் மாவட்டம் கல்பட்டு கிராமத்தில் உள்ள தனது உறவினர் சேவியர் தீபிகா தம்பதியின் மகள் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்காக தனது உறவினர்கள் 26 பேருடன் வேனில் கல்பட்டு கிராமத்துக்கு சென்றார். விழா முடிந்ததும் அனைவரும் மீண்டும் பூமடுவங்கரை நோக்கி வேனில் வந்து கொண்டிருந்தனர். அதே கிராமத்தை சேர்ந்த நடேசன் மகன் சுதாகர் என்பவர் வேனை ஓட்டினார். அப்போது திருவெண்ணெய்நல்லூர் அருகே மாரங்கியூர் பஸ் நிறுத்தம் வந்த போது திடீரென வேனின் முன்பக்க டயர் வெடித்து அங்குள்ள பயணிகள் நிழற்குடையில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் நிழற்குடை இடிந்து விழுந்ததோடு வேனின் முன் பகுதி அப்பளம்போல் நொறுங்கியது. இந்த விபத்தில் அன்பு கேசவன், வேன் டிரைவர் சுதாகர், குப்புசாமி மனைவி மனைவி தேன்மொழி(60), அய்யாசாமி மனைவி உமாமகேஸ்வரி, சுப்பிரமணியன் மனைவி வசந்தா(55), கல்வி தாஸ் மனைவி கவுசிகா(24), அஸ்வின் மகள் அஸ்வதி(17) மற்றும் 2 குழந்தைகள் உட்பட 11 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த விபத்து குறித்து திருவெண்ணெய்நல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.




### பெயர் பலகை தமிழில் தான் இருக்க வேண்டும்

# முதல்வர் ரங்கசாமி அறிவிப்புக்கு புதுவைத் தமிழ்ச் சங்கம் பாராட்டு

**புதுச்சேரி, மார்ச் 19-**

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தமிழுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை சிறப்பாக செய்து வரும் சூழலில் கலைமாமணி, தமிழ் மாமனி போன்ற விருதுகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படாமல் இருந்து வந்த நிலையில் தற்போது விருதுகளை வழங்கி தமிழ் அறிஞர்களை பெருமைப்படுத்தி இருக்கிறார். மேலும் தமிழ்மாமனி விருதில் மேடைப்பேச்சு, கவிதை, கட்டுரை ஆய்வுகள் என்று பல தரப்பட்ட நிலைகளில் உள்ளவர்களுக்கும் விருது வழங்க வேண்டும் என்று சொல்லியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். புதுவையில் உலகத்தமிழ் மாநாடு நடத்த இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இம்மாநாடு முதல்வர் ந.ரங்கசாமி தலைமையில் உலகத் தமிழர்கள் பாராட்டும் வகையில் இதனை நடத்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். மேலும் புதுச்சேரி சட்டசபையில் வணிக நிறுவனங்கள்



மற்றும் கடைகளில் பெயர்ப்பலகைகள் தமிழில் தான் இருக்க வேண்டும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ள முதல்வர் ரங்கசாமிக்கு புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக சங்கத்தலைவர் முத்து பாராட்டுகளையும் நன்றியினையும் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு போட்டி பரிசளிப்பு விழா



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு உழவர்கரை தொகுதி பிச்சைவீரன்பேட், சாலைத்தெரு மூலகுளம், உழவர்கரை வின்செண்ட் வீதி, வயல்வெளி நகர், அஜிஸ்நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் பென்களுக்கான மாபெரும் விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா பாஜக மாநில செயலாளர் மக்கள் சேவகர் உழவர்கரை சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உள்துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம் பங்கேற்று பரிசளித்தார்.

# கண்டன ஆர்ப்பாட்டம்



காரைக்காலை அடுத்த கோட்டுச்சேரி பூவம் யாதவர் தெருவில் குண்டும் குழியுமாக உள்ள சாலையை உடனடியாக சரி செய்ய வலியுறுத்தி, காரைக்கால் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவட்ட செயலாளர் மதியழகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# அடையாளம் தெரியாத முதியவர் உடலை நல்லடக்கம் செய்த காவல்துறைக்கு பாராட்டு

**திண்டுக்கல், மார்ச் 19-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் சில வருடங்களாக 60 வயது மதிக்கத்தக்க முதியவர் பல்வேறு பகுதிகளில் யாசகம் பெற்று வாழ்ந்து வந்ததாக தெரிய வருகிறது. இந்நிலையில் ஏழு தினங்களுக்கு முன்பு முதியவர் இயற்கை மரணம் அடைந்தார். இதை அறிந்த காவல்துறையினர் அவர் மரணத்தை அறிவிப்புச் செய்திருந்தும் உறவினர்களும் வராத நிலையில் முதியவர் உடலை சமூக ஆர்வலர் ஐஸ்வர்யம் அழகு நிலையம் உரிமையாளர் சண்முகவேல் மனிதநேய பண்பாலும் ஒட்டன்சத்திரம் காவல் சார்பு ஆய்வாளர் லியோனி ரஞ் சித்குமார் உத்தரவின்பேரில் காவல்துறை செந்தில், மணிகண்டன், துணையோடு நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உடலை நல்லடக்கம் செய்தனர். இதனால் இப்பகுதிவாள் பொதுமக்கள் ஒட்டன்சத்திரம் காவல்துறையினருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து வருகின்றனர்.



# காரைக்காலில் உலக செவித்திறன் தினம் பேரணி



**காரைக்கால் மார்ச் 19-**

காரைக்கால் அரசு ஆஸ்பத்திரி, ஜிப்மர் மற்றும் தேசிய காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம் தேசிய ஆரோக்கிய இயக்கம் இணைந்து, உலக செவித்திறன் தினத்தை சிறப்பாக நடத்தி, காது சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை விளக்கினர்.

இந்த ஆண்டு "மனநிலைகளை மாற்றுங்கள் செவி மற்றும் செவித்திறன் பராமரிப்புக்கு சுயவலிமை கொள்ளுங்கள்!" என்ற கருப்பொருளை முன்வைத்து, காது கேளாமை தடுப்பு, முதன்மை கண்டறிதல், மற்றும் மேலாண்மை ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியது.

இந்நிகழ்வின் சிறப்பம்சங்களில் ஒன்றாக, உலக செவித்திறன் தின விழிப்புணர்வு பேரணி நேற்று (18.03.2025) துவங்கியது. காரைக்கால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கிய இந்த விழிப்புணர்வு பேரணியை, காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அன்னை தெரசா செவிலியர் கல்லூரி, இமாகுலேட் செவிலியர் கல்லூரி, விநாயக மிஷன் செவிலியர் கல்லூரி மாணவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்று, பொதுமக்களுக்கு காது கேளாமை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் மற்றும் கோஷங்களை முன்வைத்தனர்.

விழிப்புணர்வு பேரணிக்கு பின்னர் கரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் உலக செவித்திறன் வாரம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காரைக்கால் நலவழித்துறை துணை இயக்குநர் டாக்டர்.ஆர். சிவராஜகுமார், காரைக்கால் அரசு ஆஸ்பத்திரி மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். எஸ். கண்ணகி, ஜிப்மர் காது, மூக்கு, தொண்டை துறை இணை பேராசிரியர் டாக்டர். விக்னேஷ் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும், செவிலியர் கல்லூரி மாணவர்களின் சுவரொட்டி சமர்ப்பிப்பு போட்டி நடைபெற்றது, இதில் அன்னை தெரசா செவிலியர் கல்லூரி, இமாகுலேட் செவிலியர் கல்லூரி, விநாயக மிஷன் செவிலியர் கல்லூரி ஆகிய கல்லூரிகள் பங்கேற்றன. சிறந்த சுவரொட்டிக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டில், கரைக்கால் அரசு ஆஸ்பத்திரி பல்வேறு சாதனைகளைப் பதிவு செய்துள்ளது. 500 கேள்வி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 150 ஓட்டோகாஸ்டிக் உமிழ்வுகள் பரிசோதனைகள்,165 பேச்சு பயிற்சி, 3,000 எண்டோஸ்கோபி செயல்முறைகள், 5,000 சிறிய காது, மூக்கு, தொண்டை சிகிச்சைகள், 150 பெரிய அறுவை சிகிச்சைகள், 60 அறுவை சிகிச்சைகள் கேள்வி குறைபாடு உடையவர்களுக்கு செய்யப்பட்டது 3 ஸ்டேபிடோட்டமி அறுவை சிகிச்சைகள் நடந்தன. கடந்த 2 மாதங்களில், 10 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 500 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டனர் 30 பேர் அதிகமான காது கேளாமை உடன் அடையாளம் காணப்பட்டனர். அவர்களுக்கு கேட்புக்கருவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்களை அரசு ஆஸ்பத்திரி மருத்துவர்கள் டாக்டர். எஸ். விஜயசங்கர், டாக்டர். எஸ். பிரதீப்ராஜ், டாக்டர். கே. சண்முகநாதன், டாக்டர். கார்த்தி மற்றும் ஜிப்மர் மருத்துவர்கள் டாக்டர். ஆர். கார்த்திகேயன், டாக்டர். அன்பரசி ஆகியோர் வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

# தவெக அலுவலகம் திறப்பு விழா



**கோவை, மார்ச் 19-**

கோவை குனியமுத்தூர் பகுதி 89வது வார்டில் தவெக அலுவலகம் திறப்பு விழா, கொடியேற்று விழா மற்றும் 89வது வார்டு கழக உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கும் விழா என முப்பெரும் விழா புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் இணை செயலாளர் பூ மார்கெட் சரவணன் இருந்தார். அதனைத் தொடர்ந்து பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் இப்பகுதியில் பல பொது பிரச்சினைகள் உள்ளது அதனை நாம் தீர்க்க வேண்டும். சுகாதார மையத்தில் கர்ப்பிணி பெண்களுக்குரிய மரியாதை கிடைப்பதில்லை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக கழக கொடியேற்றி கட்சி அலுவலகம் திறந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. 350க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டது. மேலும் இப்பகுதி மற்றும் 89 வது வார்டில் தமிழக வெற்றி கழகம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் நடைபெற்று வரும் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அதற்காக உழைத்த அனைவரையும் கௌரவிக்கும் வகையில் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், இளைஞரணியினர் மற்றும் மகளிரணியினர் என அனைவருக்கும் சால்வைகள் அணிவித்து கௌரவித்த மாவட்ட செயலாளர் ராஜ்குமார் மற்றும் இணைசெயலாளர் பூமார்க்கெட் சரவணன், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள் மற்றும் இளைஞரணியினர், மகளிரணியினர் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் உலக சிறுநீரக தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



சேலம், மார்ச் 19-

விநாயகம் மிஷன் பல்கலைக்கழகத்தின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு நடந்தது.

உலக சிறுநீரக தினமானது ஆண்டுதோறும் சிறுநீரக பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கிலும் அதனை சார்ந்த நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் ரத்த சுத்திகரிப்பு பிரிவின் மூலம் பொதுமக்களுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிறப்பு நிகழ்வானது பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்லூரி வளாகத்தில் சிறுநீரகம் சின்னம் வரையப்பட்டு அதில் கல்லூரியின் மாணவர்கள் ஒன்றிணைந்து நின்று சிறுநீரக வடிவமைப்பினை ஏற்படுத்தி அதன் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் ரத்த சுத்திகரிப்பு பிரிவு உதவி பேராசிரியர்கள் மகேஸ்வரன் மற்றும் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

# மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆண்டு விழா



கோவை, மார்ச் 19-

கோவை சரவணம்பட்டி கந்தசாமி நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா வட்டார கல்வி அலுவலர் எம்.ரமேஷ் பாபு, மற்றும் மாநகராட்சி மேற்பார்வையாளர் ஆ.சிவசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவ செல்வங்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டி, நடன போட்டி, கையெழுத்துபோட்டி, ஓவியப்போட்டி, சிலம்பம், கோலாட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. மேலும் மழலைசெல்வங்கள் விடுமுறை எடுக்காமல் வருகை புரிந்த குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சிகளும் அரங்கேறியது. முன்னதாக இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக வருகை புரிந்த அனைவரையும் பொறுப்பு தலைமை ஆசிரியர் சா.மெர்சி கிறிஸ்டினா எப்சிபா வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் ஆர்.கதிர்வேல் சாமி, ஜிவி.நவீன் குமார், மோகன்ராஜ், சமூக ஆர்வலர் விஜயகுமார், இரத்தனகிரி கோவில் தலைவர் புகழேந்தி, ரவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு கல்லூரியில் நடக்கும் பட்டமளிப்பு விழா போல் கருப்பு அங்கிகள் அணிவித்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்து விழாவை சிறப்பித்தனர். இது குறித்து பள்ளி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கையில், எங்களது பள்ளியில் ஐந்து மாணவர்கள் தான் பயின்றனர். தற்போது 100 குழந்தைகள் படித்து வருகின்றனர். குழந்தைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது. என்று தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவ செல்வங்கள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள் அப்பகுதி பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு ஆண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# திருநெல்வேலி மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஆலோசனைக் கூட்டம்




நெல்லை, மார்ச் 19-

திருநெல்வேலி மாவட்டத்தில் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 157 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பால், நாளொன்றுக்கு சராசரியாக 3200 லிட்டர் வரை திருநெல்வேலி ஆவின் மூலமாக கொள்முதல் செய்யப்படுகிறது.

கொள்முதல் செய்யப்படும் பால் அனைத்தும் பதப்படுத்தப்பட்டு பால் பாக்கெட்டுகளாக நகரங்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும், பால் கொள்முதலை அதிகரிக்கும் வகையில் அனைத்து வருவாய் கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு 25 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்து, துணைப்பதிவாளர், பால்வளம் அவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பித்தால் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க விரும்புவர்கள் துணைப் பதிவாளர் அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் குறைந்தது 200 லிட்டர் பால் ஆவின் மூலமாக கொள்முதல் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டது. கொள்முதல் செய்யப்படும் பாலுக்கான தொகை பால் உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வாரந்தோறும் வரவு செய்யப்படும். அரசு வழங்கும் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 ஊக்கத்தொகை ஒவ்வொரு மாதமும் பால் உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

மேலும், நாளொன்றுக்கு 70,000 லிட்டர் பால் உற்பத்தி என்றளவிற்கு பால் பெருக்கக் குறியீட்டை குறுகிய மாதங்களுக்குள் அடைய வழிமுறைகள் ஆலோசிக்கப்பட்டன. கூட்டுறவு, தேசிய வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன். பராமரிப்புக் கடன், திருப்பண்ணை கடன் பெற்று இலகுவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கறவை மாட்டிற்கான காப்பீடு தொகை அரசு மானியத்தில் ஆவின் மூலம் குறைந்த செலவில் செலுத்தப்படும்.

மேலும், அனைத்து பால் வழங்கும் சிறு குறு விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கும் விவசாய கடன் அட்டைகள் வழங்கப்படும். அனைத்துக் கிராமங்களிலும் ஊராட்சி மன்றத் தலைவர் ஒத்துழைப்புடன் இது தொடர்பாக நடைபெறும் முகாம்களில் பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டு அரசுத் திட்டங்களின் பயன்களைப் பெறலாம். மேலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத வருவாய் கிராமங்களில் புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்வது குறித்து கூடுதல் விவரங்களுக்கு துணைப்பதிவாளர்(பால்வளம்) திருநெல்வேலி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், என்ற முகவரியினை அணுகவும். மேலும், 0462 2501987. 8925901975 கொள்ளலாம்.

இக்கூட்டத்தில், துணைப்பதிவாளர்(பால்வளம்) சைமன் சார்லஸ் அவர்கள், இணை இயக்குநர்(கால்நடை பராமரிப்பு) ரிச்சர்டுராஜ், ஆவின் பொதுமேலாளர், மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், மகளிர்திட்டம் திட்ட இயக்குநர் இலக்குவன், முன்னோடி வங்கி மேலாளர் கணேஷ் மணிகண்டன் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவில் தேரோட்டம்





மதுரை, மார்ச் 19-

அறுபடை வீடுகளில் முதல் படை வீடான மதுரையில் மாவட்டம் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவில் பங்குனி பெருவிழா கடந்த 5ந்தேதி கொடி ஏற்றத்துடன் துவங்கி 15 நாள் திருவிழாவாக நடைபெற்று வருகிறது. திருவிழாவை முன்னிட்டு தினமும் சுவாமி காலையிலும் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்தனர். விழாவின் முக்கிய நிகழ்வான ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தெய்வானை திருக்கல்யானம் வெகு விமர்சியாக சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் படை சூழ அரோகரா கோஷம் முழங்க வடம் பிடித்து இழுக்க திருப்பரங்குன்றம் மலையை சுற்றி வலம் வந்தது. வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா கோசம் முழங்க முருகப்பெருமானை தரிசனம் செய்தனர்.

தேரோட்ட நிகழ்வில் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலரும் சமூக ஆர்வலருமான சண்முகசுந்தரம் தலைமையில் பக்தர்களுக்கு நீர் மோர் பிஸ்கட் பாக்கெட் பிரசாதம் வழங்கப்பட்டது.

# வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



திருவண்ணாமலை, மார்ச் 19-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சாத்தனூர் அணையிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-24ன் கீழ் ரூபாய் 55.49 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 23.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய குடிநீர் திட்ட பைப்லைன் அமைக்கப்படுகிறது. மேலும் 17.50 கிலோ மீட்டர் நீளத்தில் பைப் லைன் புதைக்கும் பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தொடர்ந்து, அம்ரூத் 2.020-22-23 திட்டத்தின் கீழ் ரூ.105.82 கோடி மதிப்பீட்டில் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைதிட்டம்செயல்படுத்தும் பணியானது தற்போது வரை 175 எண்ணிக்கையிலான Manhole அமைக்கும் பணிகள் முடிவுற்று 750 மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்றதை தொடர்ந்து, மீதமுள்ள இடங்களில் பணிகளை மேற்கொள்ள வரப்பெற்ற தளவாட பொருட்களின் தரத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாநகராட்சியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நிதி (மி-கி) 2021-22ன் கீழ் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தொடர்ந்து திருவண்ணாமலை மாநகரின் மையப்பகுதியில் பொதுமக்கள் எளிதாக அணுகக்கூடிய இடமாகவும், மாநகராட்சிக்கு சொந்தமான இடமாகவும் உள்ள காந்தி நகரில் காலியிடத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் ரூ.32.16 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த காய்கறி மற்றும் பூச்சந்தை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். புதியதாக கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தில் தரைத்தளத்தில் 128 காய்கறி மற்றும் பழக்கடைகளும், முதல் தளத்தில் 121 பூக்கடைகளும் என மொத்தம் 249 கடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடிக்க மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட முத்துவிநாயகர் கோயில் தெருவில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகளின் இருப்பு, தடுப்பூசி, நாய்கடி மற்றும் விஷப்பூச்சி கடிகளுக்கு எதிரான மருந்துகளின் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பணி தாய்மார்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து தொலைபேசி வாயிலாக கர்ப்பிணி தாய்மார்களிடம் கேட்டறிந்தார்கள். மேலும் நோயாளிகளிடம் அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் பிரகாஷ், திருவண்ணாமலை வட்டாட்சியர் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அ.தி.மு.க பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்



புதுக்கோட்டை, மார்ச் 19-

கழக பொதுச்செயலாளர், எதிர்கட்சித்தலைவர் மாண்புமிகு எடப்பாடியார் ஆணைக்கிணங்க, விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் .முன்னாள் அமைச்சர், கழக அமைப்புச்செயலாளர், புதுக்கோட்டை மாவட்ட கழக செயலாளர் (வ) சி. விஜயபாஸ்கர் ஆலோசனையின் பேரிலும் சதன் பிரபாகர், அம்மா பேரவை இணை செயலாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படியும் புதுக்கோட்டை வடக்கு நகர கழகம் சார்பில், அதன் செயலாளர் க.பாஸ்கர் தலைமையில் 40 வது வார்டு, சின்னப்பா நகரில், மண்டல குழு நிர்வாகிகள் கலந்துகொண்டு பூத் (பாகம்) கிளை கமிட்டி ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு, பாகம் கிளை புத்தகம் நகல், விளையாட்டு அணி படிவம் நகல், இளைஞர் பாசறை படிவம் நகல் மற்றும் வாக்காளர் பட்டியல் நகல் வழங்கப்பட்டது.

# கோடைக்காலத்தில் பரவும் நோய்கள் குறித்து சுகாதாரத்துறை இயக்குநர் எச்சரிக்கை



புதுச்சேரி, மார்ச் 19-

புதுச்சேரியில் தற்போது நிலவிவரும் கோடைகாலத்தில் வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துவிட்டது. இதன் காரணமாக கோடை காலத்தில் பொதுவாக பரவக்கூடிய தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு செய்தியை புதுச்சேரி சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் விடுத்துள்ள செய்தியில், தோல், கண்கள், செரிமான மண்டல தொந்தரவுகள், அம்மை நோய்கள், கோடை காலத்தில் நிலவும் சளி, இருமல் மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக வரக்கூடிய ஹீட் ஸ்ட்ரோக் போன்ற நோய்கள் உருவாக அதிக வாய்ப்பு உள்ளது. வெப்ப பக்கவாதம் (ஹீட் ஸ்ட்ரோக்) என்பது கோடை காலத்தில் அதிக வெப்பத்தினால் ஏற்படும் தலைவலி, தலைசுற்றல், பலவீனம், வெப்ப சோர்வு போன்ற அறிகுறிகள் ஆகும். இதனால் உறுப்பு செயலிழப்பு, சுய நினைவு குறைவு, மேலும் உயிரிழப்பு கூட ஏற்படலாம். வெப்ப பக்கவாதத்தின் போது ஐஸ் கட்டிகள், தண்ணீர் அல்லது குளிர்ந்த காற்றின் உதவியோடு உடலை வெளியில் இருந்து உடலை குளிர்வித்து சிகிச்சை அளிக்க முடியும். விரைந்து இச்சிகிச்சை அளிப்பதன் மூலம் உயிரிழப்பை தவிர்க்கலாம்.

கோடை காலத்தில் உணவு விஷம் என்பது மக்களுக்கு அடிக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதற்கு காரணம் சூடான ஈரப்பதமான சூழ்நிலை பாக்டீரியா போன்ற கிருமிகள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து, உணவு மாசு படுவதற்கு ஏதுவாக அமைகிறது. இதன் மூலம் வயிற்று அசௌகரியம், வாந்தி, குமட்டல், வயிற்றுப்போக்கு ஆகியவை ஏற்படுகின்றன. இதன்மூலம் வயிற்றுப்போக்கு, டைபாய்டு, காலரா, மஞ்சள் காமாலை ஆகிய நோய்களும் கோடை காலத்தில் எளிதாக தொற்றிக் கொள்ளக் கூடியவைகள்.

இவை அனைத்தும் ஏற்படாமல் இருக்க சரியாக சமைக்கப்படாத இறைச்சி, அசுத்தமான தண்ணீர், சாலையோர வியாபாரிகள் திறந்த வெளியில் வழங்கப்படும் உணவு ஆகியவற்றை மக்கள் தவிர்க்க வேண்டும்.

அதுமட்டுமன்றி சுத்தமான குடிநீரை பருக வேண்டும். நீரை கொதிக்க வைத்து ஆற வைத்து கை படாமல் கோடை காலத்தில் மக்கள் பருக வேண்டும். பழங்கள், காய்கறி கள் ஆகிய அனைத்தையும் நன்றாக கழுவி உபயோகப்படுத்த வேண்டும்.

கோடை காலத்தில் ஏற்படும் ஒருவகை வைரசால் ஏற்படுகிற கண் புண் எனப்படுகின்ற கஞ்சன்டிவைட்டீஸ் ஏற்படுகிறது. இதை தவிர்க்க சன் கிளாஸ் பயன்படுத்துதல், கண்களை தொடுவதை தவிர்த்தல், முறையான சிகிச்சை எடுத்தல் போன்ற கண் பாதுகாப்பு முறைகளை பயன்படுத்து வதன் மூலம் மக்கள் பயனடையலாம்.

கோடைகாலத்தில் மிக சாதாரணமாக ஏற்படும் நோய்களில் முக்கியமான ஒன்று நீரிழப்பு மற்றும் அதிக வெப்பத்தினால் ஏற்படும் தலைவலி ஆகும். வெயில் காரணமாக மக்களுக்கு வியர்வையில் அதிக அளவு உப்பு சத்துக்கள் வீணாகிறது.

இதை சரி செய்ய உப்பு கலந்த மோர் மற்றும் நீர் பானங்கள் அல்லது ஓஆர்எஸ் எனப்படும் உப்பு கரைசல் நீர் எடுப்பதன் மூலம் நீரிழப்பை தவிர்க்க முடியும்.

இந்த கோடை காலங்களில் வைரஸ் கிருமியால் குறிப்பாக குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, புளூ போன்ற காய்ச்சல் மற்றும் பொன்னுக்கு வீங்கி, சின்னம்மை, தட்டம்மை நோய் போன்ற நோய்களும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

இவை குழந்தைகள் இரும்பும் பொழுதும் தும்மும் பொழுதும் சுலபமாக அடுத்தவர்களுக்கு பரவக்கூடிய வைரஸ் நோய்கள் ஆகும். இந்நோய்கள் பரவாமல் தடுக்க அடிக்கடி கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவுதல், தன்சுத்தம் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உதவும். வெயிலால் ஏற்படும் நோய்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அவ்வாறு ஏற்பட்டால் தற்போது மக்களை காப்பாற்ற தேவையான மருந்துகளோடு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார மையத்தினை அணுகி சிகிச்சை பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு திருத்தச் சட்டம் குறித்து பயிற்சி



வேலூர் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு திருத்தச் சட்டம் 2025 குறித்த பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன்.

# 3 டன் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி மேற்பார்வையில் கே.எஸ்.சி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வீதி மற்றும் அரிசி கடை தெருவில் உள்ள கடைகளில் சுகாதாரத்துறை அலுவலர்களால் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் 3 டன் எடையுள்ள ரூ.5 லட்சம் மதிப்புள்ள ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை கையகப்படுத்தினார்கள்.

# பயிர்களுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு ரூ.77.30 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது: ஆட்சியர் தகவல்



கோவை, மார்ச் 19-

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டாரத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் ரூ.4,67,500, 500 மானியம் பெற்று 1000ச.மீ பரப்பளவில் பசுமை குடிலில் உயர் தொழில்நுட்ப நீரியல் வளர்ப்பு முறையில் கீரைகள் மற்றும் வீரிய வெள்ளரி சாகுபடி செய்யும் திருமலையாம்பாளையம் வடக்கு கிராமத்தை சேர்ந்த இளம் விவசாயி சிவராம் கிருஷ்ணன் வயலில் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடிலை செய்தியாளர் பயணத்தின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மல்லிகா, மதுக்கரை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சுரேஷ், வேளாண்மை உதவி இயக்குநர் சுதா ஆகியோர் உடன் இருந்தனர்.

பசுமைக்கூடார சுற்றுப்புறச்சூழலை தொழில்நுட்பம் வழங்குவது என்பது ஆகும். செடிகளுக்கு சாதகமாக மேலும் பாதகமான தட்பவெப்பநிலைகளான காற்று, குளிர், மழை அதிகப்படியான சூரிய ஒளி, அதிக வெப்பநிலை மற்றும் பூச்சி நோய்களிலிருந்து செடிகளை பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பொருத்தமான சுற்றுச்சூழலும் வளர்ப்பதற்கு ஏற்றாற்போல் பயிரிட பசுமைக்கூடாரம் பயன்படுகிறது. பசுமைக்கூடாரம் என்பது ஒளி ஊடுருவக்கூடிய அல்லது பிளாஸ்டிக் கூரையினால் போர்த்தப்பட்ட அமைப்பாகும். பசுமைக்கூடாரத்தினுள் பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலுக்குத் தேவையான தட்பவெப்பநிலை கரியமிலவாயு உட்புறத்திலேயே தங்கி விடுவதால் பகல் நேரத்தில் தாவரத்திற்கு ஒளிச்சேர்க்கைக்கு அதிகப்படியான கரியமில வாயு கிடைக்கின்றது. அதனால் ஐந்து முதல் பத்து மடங்கு அதிக ஒளிச்சேர்க்கை நடைபெறுகின்றது. ஒளிச்சேர்க்கை அதிகமாவதால் விளைச்சல் அதிகமாகவும், தரமாகவும் உள்ளது. அதைத் தவிர மண்ணிலிருந்து ஆவியாகும் நீரும் உட்புறத்திலேயே தங்கிவிடுவதால் ஈரப்பதம் அதிகமாகின்றது. அதனால் குறைந்த நீர்ப்பாசனமே தேவைப்படுகிறது.

இச்செய்தியாளர் பயணத்தின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் மதுக்கரை வட்டாரத்தில் திருமலையாம்பாளையம் வடக்கு கிராமத்தை சேர்ந்த இளம் விவசாயி சிவராம் கிருஷ்ணன் தோட்டக்கலை துறை மூலம் ரூ.4,67,500 மானியம் பெற்று 1000ச.மீ பரப்பளவில் பசுமை குடிலில் உயர் தொழில்நுட்ப நீரியல் வளர்ப்பு முறையில் கீரைகள் மற்றும் வீரிய வெள்ளரி சாகுபடி செய்துள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அப்பசுமை குடிலில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்தும், சந்தைப்படுத்துதல் குறித்து கேட்டறியப்பட்டது.

மேலும், தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற உயர் தொழில்நுட்ப திட்டங்களின் மூலம் பட்டதாரி விவசாயிகள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் குறைந்த இடத்தில் அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதால் வரும் ஆண்டுகளில் இதுபோன்ற திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதிக விவசாயிகள் உயர் தொழில்நுட்ப பசுமைகுடில் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அப்பசுமை குடிலில் இருந்து சேகரிக்கப்படும் மழைநீர் சேகரிப்பு பண்ணை குட்டையையும் பார்வையிடப்பட்டது.


கடந்த நான்கு ஆண்டுகளில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்லாண்டு பயிர்கள் சாகுபடி, பழச்செடிகள் தொகுப்பு, காய்கறி சாகுபடியினை ஊக்குவித்தல் ஆகிய இனங்களில் ரூ.1.56 கோடி மதிப்பில் 20,039 பயனாளிகளும், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வீட்டுதோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் திட்டத்தின் கீழ் மாடித் தோட்ட தளைகள் 18,000 எண்ணிக்கையிலும் மற்றும் பழச்செடி, தொகுப்புகள் 11,210 எண்ணிக்கையிலும் ரூ. 1.25 கோடி மதிப்பில் 15,397 பயனாளிகளும், பனை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.85000 மதிப்பில் 620 பயனாளிகளும், தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் ரூ. 3.07 கோடி மதிப்பில் 382 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் 40 சதவீத மான்யத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு அதிகரித்தல். வாழைத்தார் பாதுகாப்பு உறை வழங்குதல், பழைய தோட்டங்களை புதுப்பித்தல். 50 சதவீத மான்யத்தில் நீர் சேமிப்பு கட்டமைப்பு, பசுமைக்குடில் அமைத்தல், நிழல்வலை கூடாரம், நிலப்போர்வை அமைத்தல், ஒருங்கிணைந்த உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மேலாண்மை, தரம் பிரித்துசிப்பம் கட்டும் அறை, வெங்காய சேமிப்புக் கிடங்கு, நடமாடும் விற்பனை ஊர்தி ஆகிய அறுவடை பின் செய் நேர்த்தி இனங்கள், மகரந்தச் சேர்க்கையை ஊக்குவிக்க தேனீ பெட்டிகள், தேனீ காலனிகள், தேன் எடுக்கும் இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க மானியம் வழங்குதல் ஆகிய இனங்களில் ரூ.17.18 கோடி மதிப்பில் 13,200 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மான்யத்தில் விதை முருங்கை பரப்பு விரிவாக்கம். நிரந்தரபந்தல் அமைத்தல் தோட்டக்கலைப் பயிர்களை மற்றும் சிறப்பு தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கு ரூ. 3.64 கோடி மதிப்பில் 2734 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மானவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதற்கு தோட்டக்கலை பயிர்கள், விதைகள், கறவை மாடுகள், தேனீவளர்ப்பு பெட்டி, மண்புழு உரப்படுக்கை ஆகியவற்றிற்கு ரூ.2.27 கோடி மதிப்பில் 640 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டம் கீழ் பயிர்களுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு ரூ.77.30 கோடி நிதி வழங்கப்பட்டு 8563.83 எக்டரில் நுண்ணீர் பாசனம் அமைத்து 8499 பயனாளிகளும் பயன் அடைந்துள்ளனர். என தெரிவித்தார்.

இச்செய்தியாளர் பயணத்தின்போது தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் பசுமைகூடாரம் அமைத்து பயன்பெற்ற திருமலையாம் பாளையம் வடக்கு கிராமத்தை சேர்ந்த இளம் விவசாயி சிவராம் கிருஷ்ணன் தெரிவித்தாவது, நான் திருமலையாம் பாளையம் வடக்கு கிராமத்தில் தோட்டக்கலை துறை மூலம் ரூ.4,67,500 மானியம் பெற்று 1000ச.மீ பரப்பளவில் பசுமை குடிலில் உயர் தொழில்நுட்ப நீரியல் வளர்ப்பு முறையில் கீரைகள் மற்றும் வீரிய வெள்ளரி சாகுபடி செய்து வருகிறேன். பசுமைக் குடியில் அமைத்துள்ளதால் பூச்சி, நோய், எலிகள் மற்றும் பறவைகள் பயிரைத் தாக்குவதிலிருந்து தடுக்கப்படுகிறது. அதிகமான வெப்பம். பெரும் மழை மற்றும் புயல் காற்றினால் பயிருக்குச் சேதம் உண்டாக்குவது தடுக்கப்படுகிறது. பூச்சிக்கொல்லிகள், பூசணக்கொல்லிகள் மற்றும் உரங்களின் சரியான அளவு உபயோகம் சாத்தியமாகிறது. தட்பவெப்பநிலையைக் கட்டுப்படுத்த முடிகின்ற காரணத்தினால் வருடத்தின் எல்லாக் காலத்திலும் எந்த ஒரு பயிரையும் பயிர் செய்ய முடிகிறது. அதனால் ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்கின்றது. சந்தையில் பருவ மில்லாத காலத்தில் வரும் விளைப் பொருட்களுக்கு அதிக வரவேற்பும், அதிக விலையும் உள்ளது. தொடர்ந்து, உற்பத்தி செய்ய முடிவதால் பசுமைக்கூடாரம் என்போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், லாபகரமாகவும் உள்ளது என தெரிவித்தார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# சுனிதா வில்லியம்ஸ், 3 பேருடன் தரையிறங்கியது விண்கலம்

# ரேசன் பொருட்களை டோர் டெலிவரி செய்யும் திட்டம்: புதுச்சேரி அரசு



# அரசு ஊழியர்கள் பணிக்கு வராவிட்டால் சம்பளம் 'கட்': தமிழக அரசு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 19-3-2025 புதன்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்